RS Polyclinic
OUR RS TRAINED DOCTORS
Dr M. Rajkumar — Sr Vascular Surgeon — 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari — Sr Eye Surgeon — 9444 288784
Dr Sathish Rajkumar — Laparoscopic & Laser Surgeon — 9445 401793
Dr Shanthi R. — Sr Vascular Surgeon — 9884 650945
Dr Salma R — General Physician — 87780 87742
Dr Praveena E — Sr ENT Surgeon — 9944 100443

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 22 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 134

மதிமுகவை அழிக்க திமுகவால் முடியாது! வைகோ ஆவேசம்

சென்னை – 22 நவம்பர், 2026

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தை யாராலும் அழிக்கவோ, வேறு கட்சியுடன் இணைத்துக் கரைக்கவோ முடியாது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

திமுகவுடனான கூட்டணியிலிருந்து வெளியேறியது தொடர்பாக விளக்கமளித்த அவர், கட்சியின் பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறியுள்ளார்.

கொள்கை அடிப்படையில்தான் கூட்டணியிலிருந்து விலகியதாகவும் தெரிவித்துள்ளார்.

முதல்வர் தன்னை அண்ணன் என்று அழைத்த காரணத்தினால்தான் அவரைச் சந்திக்கச் சென்றதாகவும், இந்தச் சந்திப்பு திமுகவினருக்குப் பிடிக்கவில்லை என்றும் வைகோ கூறியுள்ளார்.

முதல்வருடன் நடந்து சென்றபோது தனது கையைப் பிடித்து இழுத்ததாகவும், தான் அமைச்சரைப் பார்த்துக் கைநீட்டிப் பேசவில்லை என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

திமுகவுக்கு ஆதரவாகச் சில ஊடகங்கள் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டிய வைகோ, உண்மையான பத்திரிகையாளர்களாகி இருந்தால் தனது கருத்துகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளித்து வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மோடி தனக்கு அதிக வாய்ப்புகளை வழங்கியதாகக் குறிப்பிட்ட அவர், கொலைக் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஒருவரை அழைத்து வந்தது தவறு என்று கூறியதன் காரணமாகவே கூட்டணியிலிருந்து வெளியேறியதாகவும் தெரிவித்துள்ளார்.

தன்னை நடிகர் வடிவேலுவுடன் ஒப்பிட்டுப் பேசியது மகிழ்ச்சியளிப்பதாகக் கூறிய வைகோ, நடிகர் விஜயகாந்த்தைத் தமிழகம் முழுவதும் பிரபலப்படுத்திவிட்டு, தேவை முடிந்ததும் அவரைக் கைவிட்டதாகவும், பட வாய்ப்பு வழங்குவதாகக் கூறி வடிவேலுவை ஏமாற்றியதாகவும் விமர்சித்துள்ளார்.

மதிமுகவை அழிக்க முன்னாள் முதல்வர் கருணாநிதியே முயற்சி செய்ததாகக் குறிப்பிட்ட அவர், மேகதாது அணைப் பிரச்னைக்காக முதலில் போராடியவர் தான்தான் என்றும் தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம் தொடர்பான தீர்ப்பு துரதிர்ஷ்டவசமானது என்று குறிப்பிட்ட வைகோ, தமிழகத்தில் நடைபெறும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தூத்துக்குடியில் 9 வயது சிறுமிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்தைக் குறிப்பிட்ட அவர், சம்பந்தப்பட்ட குற்றவாளி மூன்று முறை ஜாமீனில் வெளியே வந்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிரீஸ் நாட்டில் திருமணம் நடத்த வேண்டிய அவசியம் என்ன என்றும் கேள்வி எழுப்பிய வைகோ, தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து திமுகவுடன் நேரடி விவாதத்திற்குத் தயாராக இருப்பதாகவும் சவால் விடுத்துள்ளார்.

தமிழகத்தின் முதலீடுகள் ஆந்திர மாநிலத்திற்குச் செல்லவில்லை என்றும் குறிப்பிட்ட அவர், முதல்வர் விஜய் நேர்மையான ஆட்சியை நடத்தி வருவதாகவும், ஊழல்வாதிகள் அவரை நெருங்க முடியாது என்றும் கருத்து தெரிவித்துள்ளார்.